RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-42 | 12 பிப்ரவரி | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## குடிமனைப் பட்டா பிரச்சினைக்கு தீர்வு: தமிழக அரசின் முடிவுக்கு மார்க்சிஸ்ட் வரவேற்பு

சென்னை, பிப்.12



குடிமனைப் பட்டா பிரச்சினைக்கு தீர்வு கண்ட தமிழ்நாடு அரசின் முடிவுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து இக்கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சென்னையை சுற்றியுள்ள நான்கு மாவட்டங்களில் 32 கிலோ மீட்டருக்குள் உள்ள பகுதிகளில் 29,187 குடும்பங்களுக்கும், அதேபோல் சென்னை மாநகராட்சி தவிர்த்து மற்ற மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் ஆட்சேபனையற்ற புறம்போக்கு இடங்களில் வசிக்கும் 57,000 குடும்பங்களுக்கும் பட்டா வழங்கவும் ஒட்டுமொத்தமாக 86,000 குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கிட தமிழக அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக வருவாய்த்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

அரசு புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு, பெல்ட் ஏரியா, நீர்நிலைப் பகுதிகளில் ஏழை, எளிய அடித்தட்டு மக்கள் பல ஆண்டுகளாக குடியிருந்து வருகின்றனர். அவர்கள் வசிக்கும் இடத்திற்கு பட்டா வழங்கிட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து ஆர்ப்பாட்டம், மறியல், காத்திருப்பு போராட்டம் என பல்வேறு இயக்கங்களை மாநிலம் முழுவதும் தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறது. இந்த இயக்கங்களில் பாதிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

இந்நிலையில், நீண்ட கால பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் தமிழ்நாடு அரசு எடுத்துள்ள இம்முடிவை சிபிஐ (எம்) வரவேற்கிறது. அதேநேரத்தில், ஏற்கெனவே நீர்நிலை மற்றும் ஆட்சேபனைக்குரிய புறம்போக்கில் பல ஆண்டுகளாக சாதாரண மக்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் வசித்து வருகிற ஆட்சேபனைக்குரிய புறம்போக்கு என்கிற பகுதி குடியிருப்பு பகுதிகளாக மாறி இனி வேறு வகையில் பயன்படுத்த முடியாததாகவும், பல லட்சக்கணக்கான மக்களின் குடியிருப்பு உரிமை சம்பந்தப்பட்ட ஒன்றாகவும் இருக்கிறது.

எனவே, அப்படிப்பட்ட பகுதிகளில் வசிக்கக் கூடிய மக்களுக்கும், அரசு ஆவணங்களில் உரிய மாற்றம் செய்து பட்டா வழங்கிட வேண்டுமென தமிழக அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு வலியுறுத்துகிறது" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அலங்காநல்லூர் கீழக்கரை அரங்கில் ஜல்லிக்கட்டு தொடக்கம்

மதுரை, பிப்.12



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு அலங்காநல்லூர் கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் தொடர்ந்து 2 நாட்கள் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டி இன்று (பிப்.11) காலை தொடங்கியது. போட்டியை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி காலை 7:00 மணியளவில் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

முன்னதாக, மாடுபிடி வீரர்கள் உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர். மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட 900 காளைகள், 500 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

களத்தில் நின்று விளையாடும் காளையின் உரிமையாளருக்கும், காளைகளை தழுவும் வீரர்களுக்கும் தங்கக்காசு, சைக்கிள், மிக்ஸி உள்ளிட்ட பரிசுகள் வழங்கப்பட உள்ளன. மதுரை கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட, மேற்கு, வடக்கு, திருப்பாலை, ஆனையூர் பகுதி காளைகள் களம் காண்கின்றன.

இப்போட்டிகளில் பங்கேற்கும் காளைகளை கால்நடை மருத்துவர்கள் பரிசோதித்து அனுப்புகின்றனர். மாடுபிடி வீரர்களை சுகாதாரத்துறை மருத்துவர்கள் பரிசோதித்து தகுதிச் சான்று வழங்கி வருகின்றனர்.

அலங்காநல்லூர் கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம் மைதானம் ஜல்லிக்கட்டு பார்வையிட வரும் பார்வையாளர்கள் வசதிக்காக பேருந்து நிலையத்தில் இருந்து சிறப்பு பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும், ஜல்லிக்கட்டை காண மைதானத்துக்கு வரும் பார்வையாளர்கள் அனைவருக்கும் அரங்கில் அனுமதி இலவசம்.

போட்டியைக் காண மதுரை உள்ளிட்ட பல்வேறு பகுதியைச் சேர்ந்த மக்கள் குவிந்துள்ளனர். மதுரை மாவட்ட எஸ்.பி அரவிந்த் தலைமையில் சுமார் 1000க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்

## "ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.20க்கும் அதிக விலை கொடுத்து வாங்குவதை ஏற்க முடியாது" - அன்புமணி

சென்னை, பிப்.12



"ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.6க்கும் குறைந்த செலவில் தயாரிக்க முடியும் எனும் நிலையில், ரூ.20க்கும் அதிக விலை கொடுத்து வாங்குவதை ஏற்க முடியாது. இதே நிலை நீடித்தால் எத்தனை முறை மின் கட்டணம் உயர்த்தப்பட்டாலும் மின்சார வாரியத்தை லாபத்தில் இயக்க முடியாது. எனவே, நிலுவையில் உள்ள அனல் மின் திட்டங்களை விரைந்து செயல்படுத்தி மின்னுற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும்" என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தில் பிப்ரவரி மாதத்தில் மாலை நேரத்தில் சுமார் 3 ஆயிரம் மெகாவாட் அளவுக்கு மின்பற்றாக்குறை நிலவுவதாகவும், ஏப்ரல் மாதத்தில் இது 4,697 மெகாவாட்டாக அதிகரிக்கும் என்றும் மத்திய மின்சார ஆணையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மின்பற்றாக்குறையை சமாளிக்க சில நேரங்களில் ஒரு யூனிட் ரூ.20 என்ற விலைக்கு மின்சாரத்தை வாங்க வேண்டியிருக்கும் என்று மின்சார வாரிய அதிகாரிகள் தெரிவித்ததாக நாளிதழ் ஒன்றில் வெளியாகியுள்ள செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு சொந்தமான அனல்மின் நிலையங்களில் ஒரு யூனிட் மின்சாரத்துக்கான உற்பத்திச் செலவு ரூ.6க்கும் குறைவாகவே இருக்கும் நிலையில் தனியாரிடமிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்க வேண்டியிருப்பது மிகவும் கவலையளிப்பதாகவும் அந்த அதிகாரி கூறியிருப்பதாக செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தான் பாமகவும் பல ஆண்டுகளாக கூறி வருகிறது.

தமிழகத்தில் கடந்த 20 ஆண்டுகளில் 2100 மெகாவாட் அளவுக்கு மட்டும் தான் அனல் மின்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. கடந்த பத்தாண்டுகளில் ஒரே ஒரு அனல் மின் திட்டம் கூட செயல்படுத்தப்படவில்லை. வடசென்னை மூன்றாம் நிலை அனல் மின்நிலையம் தொடங்கப்பட்டு ஓராண்டு நிறைவடையும் நிலையில் இன்று வரை வணிகரீதியிலான மின்னுற்பத்தி தொடங்கப்படவில்லை.

தமிழகத்தில் சுமார் 17,000 மெகாவாட் அளவுக்கு அனல் மின் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 5700 மெகாவாட் அளவுக்கான அனல் மின் திட்டங்களுக்கான அடிப்படைப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்கள் விரைந்து செயல்படுத்தப்பட்டால் தனியாரிடமிருந்து மின்சாரம் வாங்க வேண்டிய நிலை ஏற்படாது. ஆனால், தங்களின் சுயநலனுக்காக அப்படி ஒரு நிலை உருவாவதை ஆட்சியாளர்கள் விரும்பவில்லை.

ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.6க்கும் குறைந்த செலவில் தயாரிக்க முடியும் எனும் நிலையில், ரூ.20க்கும் அதிக விலை கொடுத்து வாங்குவதை ஏற்க முடியாது. இதே நிலை நீடித்தால் எத்தனை முறை மின் கட்டணம் உயர்த்தப்பட்டாலும் மின்சார வாரியத்தை லாபத்தில் இயக்க முடியாது. எனவே நிலுவையில் உள்ள அனல் மின் திட்டங்களை விரைந்து செயல்படுத்தி மின்னுற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும்" என்று அவர் கூறியுள்ளார்.

## இந்தியாவின் சிறுபான்மையினரை மத்திய அரசு ஒடுக்க முயல்வதாக இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக்கின் துணைத் தலைவர் கே.நவாஸ்கனி புகார்

புதுடெல்லி



இந்தியாவின் சிறுபான்மையினரை மத்திய அரசு ஒடுக்க முயல்வதாக இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக்கின் துணைத் தலைவர் கே.நவாஸ்கனி புகார் கூறியுள்ளார். இதை அவர் நாடாளுமன்ற மக்களவையில் பட்ஜெட் விவாதத்தில் பேசியபோது தெரிவித்தார்.

இது குறித்து ராமநாதபுரம் மக்களவை தொகுதி எம்.பியுமான கே.நவாஸ்கனி பேசியதாவது: தேசிய கல்விக் கொள்கையையும் அதன் அடிப்படையில் மும்மொழி கொள்கையையும் திணிக்க முயல்கிறது மத்திய அரசு. உங்களின் வஞ்சகமான இந்த நோக்கத்தை மாநில அரசு நிராகரித்துள்ளது.

இந்த ஒரே காரணத்திற்காக அப்பட்டமான அச்சுறுத்தலை எங்கள் தமிழ்நாட்டிற்கு விடுத்திருக்கிறீர்கள். தமிழ்நாட்டின் எங்கள் மாணவர்களுடைய ரூ.2,152 கோடி நிதியை பறித்து வேறு மாநிலங்களுக்கு பகிர்ந்தளித்து உள்ளீர்கள். வளரும் தலைமுறையின் வளர்ச்சியில் கை வைக்கும் உங்களுடைய செயலை வரலாறு ஒருபோதும் மறக்காது, மன்னிக்காது. நிதி தர மறுத்து உங்கள் கல்விக் கொள்கையையும் மொழி திணிப்பையும் எங்கள் மீது திணிக்க பார்க்கிறீர்கள். சிறுபான்மை மக்களுக்கு எதிரான பார்வையை பாஜக அரசு கடந்த 10 ஆண்டு காலம் தொடர்ந்து விரிவாக்கிக் கொண்டே தான் சென்று கொண்டிருக்கிறது.

அதற்கு இந்த நிதிநிலை அறிக்கையும் விதிவிலக்கு இல்லை. சிறுபான்மை மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை தொடர்ந்து குறைக்கப்படுவதிலிருந்தும் இதை நாம் பார்க்க முடிகிறது. பட்டியல் சமூகத்திற்கும் பழங்குடியினருக்கும் சிறுபான்மை மாணவர்களுக்கும் வழங்கப்படும் பிரீ மெட்ரிக் ஸ்காலர்ஷிப், போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்ஷிப் என்ற கல்வி உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன.

இதற்காக, கடந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.6,360 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், ரூ.760 கோடி அதில் செலவு செய்யப்படவில்லை. வெளிநாடுகளில் பயிலக்கூடிய மாணவர்களுக்கான ஓவர்சீஸ் ஸ்காலர்ஷிப்பிற்கு மிகச் சொற்பமான தொகை மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சி படிப்பிற்கான கல்வி உதவித்தொகை முற்றிலுமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. மவுலானா அப்துல் கலாம் ஆசாத் எஜுகேஷன் பவுண்டேஷன் கல்வி உதவித்தொகை இந்த அரசால் முற்றிலுமாக நிறுத்தப்பட்டிருக்கிறது.

சிறுபான்மை மாணவர்கள் ஆராய்ச்சி கல்வி கற்பதை இந்த அரசு விரும்பவில்லையோ என்ற சந்தேகம் எழுகிறது. எதற்காக இந்த பாரபட்சம்? எதற்காக சிறுபான்மை மக்களின் கல்வியில் கை வைக்கிறீர்கள்? சிறுபான்மை மாணவர்களுக்கான பிரீ மெட்ரிக் ஸ்காலர்ஷிப் கடந்த நிதியாண்டில் அறிவித்த ரூ.326 கோடியில் வரும் ரூ.90 கோடி மட்டுமே செலவு செய்திருக்கிறீர்கள், இந்த நிதி ஆண்டில் வெறும் ரூ.195 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்ஷிப் கடந்த நிதி ஆண்டில் ரூ.1,145 கோடி அறிவிக்கப்பட்டு அதில் வெறும் ரூ.344 கோடி மட்டுமே செலவு செய்யப்பட்டது தற்போது அந்த கல்வி உதவித் தொகையையும் ரூ.413.9 கோடியாக குறைக்கப்பட்டிருக்கிறது. இப்படி சிறுபான்மை மாணவர்களின் கல்வியில் கை வைக்கக் கூடிய அரசாக இந்த அரசு இருக்கின்றது. கல்வி ரீதியாகவும் சிறுபான்மை கல்வியில் தாக்குதலை ஏற்படுத்துகிறது, பொருளாதார ரீதியாகவும் சிறுபான்மையினரின் பொருளாதாரத்தை குலைக்கும் வக்ஃபு திருத்த சட்டத்தை இந்த அரசு கொண்டுவர நினைக்கிறது. ஏற்கெனவே, உள்ள வக்ஃபு சட்டங்களினால் நாங்கள் எந்த வகையில் பாதிக்கப்படுகின்றோம் என்பது குறித்து ஆராய்ந்து, அதற்கு எந்த தீர்வையும் இந்த அரசு கொண்டு வரவில்லை, வஃக்பில் நாங்கள் பயன்படுத்த முடியாமல் இருக்கக்கூடிய சொத்துக்களை மேம்படுத்த ஒரு திட்டம் இருந்தது.

இந்த திட்டத்தில் ரூ.2 கோடி வரை கடன் உதவி பெறும் வாய்ப்பும் இருந்தது. இதன் மீது நான் தமிழ்நாடு வக்ஃபு வாரிய தலைவராக பொறுப்பேற்றவுடன் ஆய்வு செய்தேன். இந்தத் திட்டத்தின் மூலமாக பயன்படக்கூடிய மாநிலங்களின் விவரங்களை விசாரித்ததில் அதிர்ச்சியான தகவல் கிடைத்தது.

கடந்த மூன்று ஆண்டுகளாக அந்த கடன் உதவி திட்டத்தில் எந்த மாநிலத்துக்கும் அளிக்கப்படவில்லை எனத் தெரிந்தது. இதற்கு, அந்த திட்டம் மத்திய வக்ஃபு கவுன்சில் ஒப்புதல் அவசியமாகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்த, கடந்த மூன்று ஆண்டுகளாக மத்திய வக்ஃபு கவுன்சில் அமைக்கப்படவே இல்லை. எனவே, இந்தத் திட்டத்தின் மூலம் யாருக்கும் இதுவரை எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை.

சிறுபான்மையினரின் வக்ஃபு சொத்துக்களில் வாடகைக்கு இருப்பவர்களிடம் கூடுதல் வருமானம் பெறவும் வழிவகை செய்யப்படவில்லை. ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து அந்த சொத்துக்களை மீட்பதற்கான எந்த திட்டமும் இல்லை.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வக்பு சொத்துக்களை மீட்கும் வகையில் வக்பு திருத்த மசோதா இருக்க வேண்டும். இதைவிடுத்து, இந்த அரசு கொண்டு வரும் திட்டங்கள், சிறுபான்மை மக்களின் கல்வி ரீதியாகவும் ஒடுக்கு நோக்கிலும் உள்ளன. பொருளாதார ரீதியாகவும் எங்களை ஒடுக்கும் நோக்கமும் இதில் உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

## அரசு பள்ளியில் மயங்கி விழுந்து உயிரிழந்த 7ம் வகுப்பு மாணவியின் குடும்பத்துக்கு ரூ.5 லட்சம்! முதல்வர் ஸ்டாலின் உத்தரவு

சென்னை, பிப்.12






பட்டுக்கோட்டை பள்ளத்தூர் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி 7ம் வகுப்பு மாணவி கவிபாலா உயிரிழப்புக்கு இரங்கல் தெரிவித்துள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், மாணவியின் குடும்பத்துக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ.5 லட்சம் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்திக் குறிப்பு: தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சொக்கநாதபுரம் கிராமம், கொம்புக்காரன் குட்டை பகுதியைச் சேர்ந்த கண்ணன் பரிமளா தம்பதியரின் மகள் கவிபாலா (12) என்பவர் பட்டுக்கோட்டை வட்டம், ஆண்டிக்காடு சரகம், பள்ளத்தூர் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பில் பயின்றுவந்த நிலையில் நேற்று (பிப்.10) பள்ளியில் மயங்கி விழுந்த நிலையில் உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த மாணவி கவிபாலாவின் உயிரிழப்பு அவரது குடும்பத்தினருக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவி கவிபாலாவின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த மாணவியின் பெற்றோருக்கு ஐந்து லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

நடந்தது என்ன? தஞ்சாவூர் மாவட்டம் சொக்கநாதபுரம் பகுதியைச் சேர்ந்த தம்பதி கண்ணன் பரிமளா ஆகியோரின் மகள் கவிபாலா (12). பள்ளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வந்தார். இப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு அழகியநாயகிபுரம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவக் குழுவினரால், குடற்புழு நீக்க மாத்திரைகள் திங்கள்கிழமை வழங்கப் பட்டன. இந்த மாத்திரையை கவிபாலாவும் நண்பகல் 12 மணி யளவில் உட்கொண்டுள்ளார்.

2 மணியளவில் பள்ளியில் விளையாடிக் கொண்டிருந்தபோது, திடீரென கவிபாலா மயங்கி விழுந்தார். அவரது மூக்கு மற்றும் வாய் வழியாக ரத்தம் சிந்திருந்தது. இதையடுத்து, ஆசிரியர்கள் துரைசிங்கம், வீரமணி ஆகியோர் கவிபாலாவை, அழகியநாயகிபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு காரில் அழைத்துச் சென்றனர். பின்னர், அங்கிருந்து பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக் குக் கொண்டு சென்றனர். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்து கவிபாலா ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

இதுகுறித்து சேதுபாவாசத்திரம் போலீஸார் விசாரித்து வருகின்றனர். இதனிடையே, மாணவியின் உயிரிழப்பு விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, பள்ளி முன்பு பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். தகவலறிந்து பட்டுக்கோட்டை வட்டாட்சியர் சுகுமாரன் உள்ளிட்ட அதிகாரிகள் சென்று பேச்சுவார்த்தை நடத்தி போராட்டத்தை கைவிடச் செய்தனர்.

இதுபற்றி பொது சுகாதாரத் துறை தஞ்சாவூர் மாவட்ட துணை இயக்குநர் கலைவாணி கூறும்போது, ''தஞ்சாவூர் மாவட்டத்தில் பள்ளத்தூர் பள்ளியில் 389 பேருக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்பட்ட நிலையில், மாத்திரை உட்கொண்ட சில மணிநேரங்களில் ஒரு மாணவி மயங்கி விழுந்துள்ளார். அவரது உயிரிழப்புக்கான காரணம் குறித்து பிரேதப்பரிசோதனைக்கு பின்னர்தான் தெரியவரும்'' என்று கூறியிருந்தார். தஞ்சை மாவட்ட முதன்மைகல்வி அலுவலர் அண்ணாதுரை கூறும்போது, ''மாணவி உயிரிழந்தது தொடர்பாக விசாரணை நடத்தி வருகிறோம்'' என்று தெரிவித்திருந்தார்.

## கன்னியாகுமரி அருகே காமராஜரின் உருவம் பதித்த கல்வெட்டு சேதம் காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை கண்டனம்

சென்னை, பிப்.12

"கன்னியாகுமரி மாவட்டம், மாத்தூர் தொட்டிபாலத்தில் அமைந்துள்ள காமராஜரின் உருவம் பதித்த கல்வெட்டு மர்ம நபர்களால் உடைக்கப்பட்டு, சேதப்படுத்தப்பட்டதை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக வன்மையாக கண்டிக்கிறேன்" என்று அக்கட்சியின் தலைவர் செல்வப்பெருந்தகை கூறியுள்ளார். திருவுருவச் சிலையும், கல்வெட்டும் விரைவில் திறக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கன்னியாகுமரி மாவட்டம், மாத்தூர் தொட்டிபாலத்தில் அமைந்துள்ள கர்மவீரர் காமராஜரின் உருவம் பதித்த கல்வெட்டு மர்ம நபர்களால் உடைக்கப்பட்டு, சேதப்படுத்தப்பட்டுள்ளது. இச்சம்பவம் காமராஜர் மீது அளவற்ற பற்று கொண்டுள்ள அப்பகுதி மக்களிடையே மிகப்பெரிய அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இத்தகைய அநாகரிக வன்முறைச் செயலுக்கு காரணமானவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சமீப காலமாக அப்பகுதியில் மதவாத சக்திகளின் செயல்பாடுகள் அதிகரித்து வருகிற நிலையில் இச்சம்பவம் நடைபெற்றிருக்கிறது. எனவே, சம்மந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லையெனில், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு ஏற்படுகிற நிலை உருவாகக்கூடிய வாய்ப்பு உள்ளது. கல்வெட்டு உடைக்கப்பட்ட இடத்தில் மீண்டும் காமராஜரின் திருவுருவச் சிலையும், கல்வெட்டும் விரைவில் திறக்கப்படும்," என்று அவர் கூறியுள்ளார்.

## நூற்றாண்டு கால பழமை வாய்ந்த வெலிங்டனில் முருகன் கோவிலில் கும்பாபிஷேக விழா! பக்தர்கள் தரிசனம்



குன்னூர்,பிப்12

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள வெலிங்டனில் முருகன் கோவில் கட்டப்பட்டு 172 ஆண்டுகள் பழைமை வாய்ந்த நிலையில் இந்தக் கோவிலை புதுப்பித்து இந்து அறநிலை துறை சார்பில் திருப்பணி பணிகள் நடைபெற்றது. இதில்

கோவிலின் முன்புறம் விநாயகர், பைரவருக்கு புதிதாக மண்டபம், மகா மண்டபத்தின் உட்புறம் புதிய கொடிமரம், அன்னதானக் கூடம் என பல்வேறு திருப் பணி கள் நடந்தது.

தொடர்ந்து கும்பாபிஷேக ஏற்பாடுகள் கடந்த 2 நாட்களாக நடந்தது.

முன்னதாக நேற்று முன்தினம் கணபதி வழிபாடு, வேதா அனுக்ஞை, புண்யாகவாசனம் வாஸ்துசாந்தி, கணபதி, மகாலட்சுமி, நவக்கிரக, சுதர்சன ஹோமங்கள், கும்பஸ்தாபனம், வேதிகார்ச்சனை, முதல் கால வேள்வி, பூர்ணாகுதி, தீபாராதனை ஆகியவை நடந்தன.

நேற்று காலை பாலசுப்பிர மணிய சுவாமி கோவிலில் கும்பாபிஷேகம் நடந்தது. தொடர்ந்து காலை, 10:00 மணிக்கு அருகிலுள்ள கோதண்ட ராமர் கோவிலில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. விழாவைத் தொடர்ந்து ஏராளமான பக்தர்கள் பாலசுப்பிரமணியர் மற்றும் கோதண்ட ராமரை தரிசனம் செய்தனர்.

விழாவிற்கு நீலகிரி மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா, கண்டோன்மென்ட் வாரிய முதன்மை நிர்வாக அதிகாரி வினீத் பாபாசாகிப் லோட்டே, வாரிய பொறியாளர் சுரேஷ், சார் ஆட்சியர் சங்கீதா, உட்பட பல மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து வான வேடிக்கை மற்றும் அன்னதானம் ஆகியவை நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை இந்து அறநிலைய துறையினர், திருப்பணிக் குழுவினர், உபயதாரர்கள் செய்து இருந்தனர். இதனை தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டல பூஜை நடைபெற உள்ளது.



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் தைப்பூச திரு விழாவையோட்டி நேற்று குறிஞ்சி ஆண்டவர் கோவிலுக்கு 1008 தீர்த்த குடம் ஊர்வலமாக கொண்டு வந்து முருகனுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது இதனை அடுத்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது..

## தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் தைப்பூச விழா



தேனி.பிப் 12

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் இந்து சமய அறநிலையத்துறை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் தைப்பூச விழா 11022025 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இவ்விழாவில் அதிகாலை 4.30 மணிக்கு வள்ளி தேவசேனா சுப்பிரமணியருக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து சுப்பிரமணியருக்கு தங்க கவசம் அணியப்பட்டது. தைப்பூச விழாவில் ஜி.வி.ஷி.ஷி.சி.ஷி.முத்துராஜன் பரம்பரை அறங்காவலர் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மற்றும் கோயில் செயல் அலுவலர் விழா ஏற்பாடு செய்தார். இவ்விழாவில் பக்தர்களும் ஆன்மீக நண்பர்களும் கலந்துகொண்டு முருகனின் திருவருளைப் பெற்றுச்சென்றனர்.

## திருக்குறள் மாநாட்டில் வெற்றி பெற்ற மாணவிகளை பாராட்டி கவுரவித்த கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர்



கன்னியாகுமரி, பிப்.12

தமிழ் திறனறித்தேர்வு தமிழ்நாடு அரசால் பதினொன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு கடந்த ஆண்டில் இருந்து நடத்தப் படுகிறது.அதில் வெற்றிப்பெறும் 1500 மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு ரூ.1500 உதவித்தொகை வழங்குகிறது. இந்த வருடம் நடைபெற்ற தமிழ் திறனறித்தேர்வில் கன்னியாகுமரி மாவட்டத் திலிருந்து கவிமணி அரசு மகளிர் மாதிரி மேல்நிலைப்பள்ளி புனித ஜோசப் கால்வெண்ட் பள்ளி அல்போன்சா மெட்ரிக் பள்ளி குமரி மெட்ரிக் பள்ளி முஞ்சிறை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, கிறிஸ்து ராஜா் மெட்ரிக் பள்ளி அமலா கான்வெண்ட் பள்ளி, அமலா மெட்ரிக் பள்ளி முளகுமூடுபுனித ஜோசப்பள்ளி ள்ளிட்ட பல்வேறுபள்ளிகளில் இருந்து 23 மாணவர்கள் தேர்வாகினார்.

மாநிலம் முழுவதும் தேர்வான 1000 மா□களையும் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் விருதுநகரில் ஒருங்கிணைத்து கடந்த 31.012025. 01.02.2025 .ஆகிய இரு தினங்கள் திருக்குறள் மாநாடு நடத்தினார்கள் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்.நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர். ஆகியோர் காணொளி மூலம் மாநாட்டை தொடங்கி வைத்துனர் தேர்வில் வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பேச்சு. கவிதை. சிறுகதை. பொன்ற தனித்திறன் போட்டிகளும் வினாடி வினா. நடனம், நாடகம் .பாவனை நாடகம் போன்ற குழுப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

நம் மாவட்டத்திலிருந்து அனைத்துப் போட்டிகளிலும் மாணவிகள் கலந்து கொண்டனர். போட்டிகளில் பங்கேற்கும் மாணவிகளுக்கு முதன்மை கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி. நேர்முக உதவியாளர்கள், பள்ளித் துணை ஆய்வாளர் ஐயப்பன் பொறுப்பாசிரியராக கவிமணி முதுகலை தமிழாசிரியர் முனைவர் ஈஸ்வரி. மற்றும் பட்டதாரி ஆசிரியர் சியாமளன் ஆகியோர் தலைமையில் 15 நாட்கள் தக்கலை அமலா கான்வென்டில் வைத்து சிறப்பான பயிற்சி வழங்கப்பட்டது. அதன் பயனாக திருக்குறள். பரத நாட்டிய போட்டியில் கன்னியாகுமரி மாவட்டம் மாணவி திரேஸ் தென்றல் ஜெகத். மார்த்தாண்டம் கிறிஸ்து ராஜா மெட்ரிக் பள்ளி அம்பா அமலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி தக்கலை. சீதா லெட்சுமி அரசு மேல்நிலைப்பள்ளி ஏழு சாட்டுபத்து. மெரியா வில்லெட்.

அரசு மேல்நிலைப்பள்ளி முன்சிறை லினிஷா, அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி முன்சிறைஊரு ஸ்டெபி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி முன்சிறை அஸ்மிதா, அமலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி தக்கலை ஆகியோரர் மாநில அளவில் முதலிடம் பெற்று ரூ 15000 பரிசுத்தொகையை பெற்றுள்ளார்கள். சிறுகதைப் போட்டியில் குமரி மெட்ரிக்பள்ளி மாணவி மாநில அளவில் இறுதி சுற்றில் கலந்து கொண்டார். இது போன்ற பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு தங்கள் தனித்திறமைகளை வளர்த்து நமது பாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா. தெரிவித்தார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர் முக உதவியாளர் சாரதா. ஆசிரியர்கள் மாணவமாணவி யர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பல்லாவரம் 1வது மண்டலத்துக்கு உட்பட்ட பகுதிகளில் நியாய விலை கடைகள், காவல் உதவி மையம், காரியமண்டபத்தை எம்எல்ஏ திறந்து வைத்தார்

பம்மல் பிப் 12

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி, 1வது மண்டலத்துக்கு உட்பட்ட பகுதிகளில் நியாய விலை கடைகள், காவல் உதவி மையம், காரியமண்டபம் அமைத்து தர வேண்டுமென அப்பகுதி பொதுமக்கள் சார்பில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர்யிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்று தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 5வது வார்டு பகுதியில் ரூபாய் 12.50 லட்சம் மதிப்பீட்டில் நியாயவிலை கடை, கழிவறை வசதி உடன் கட்டிடம்.

10வது வார்டு பகுதியில் ரூபாய் 12.50 லட்சம் மதிப்பீட்டில் நியாயவிலை கடை, கழிவறை வசதி உடன் கட்டிடம்.

12வது வார்டு பகுதியில் ரூபாய் 3.80 லட்சம் மதிப்பீட்டில் காவல் உதவி மையம். 6வது வார்டு பகுதியில் ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் காரிய மண்டபம் கட்டிடம் அமைக்கும் பணிகள் நடைபெற்றது பணிகள் நிறைவடைந்த நிலையில் அவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்.



இந்நிகழ்ச்சியில் 1வது மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி, உதவி செயற்பொறியாளர் சத்தியசீலன், இளநிலை பொறியாளர் அருணாச்சலம், பல்லாவரம் சரக கூட்டுறவுத் துறை சார்பதிவாளர் நிலோபர் நிஷா, மாமன்ற உறுப்பினர் மதினா பேகம், கல்யாணி டில்லி, சத்யா மதியழகன், அனிஸ்டன், குரோம்பேட்டை காவல் உதவி ஆய்வாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்..

## பெரியகுளம் அருகே மும்மூர்த்தி திருக்கோயிலில் மஹா கும்பாபிஷேக விழா





பெரியகுளம் பிப்12

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே முருகமலை ஈச்சமலை ரோட்டில் அமைந்துள்ள திருஞானசம்பந்தர் திருமடம் திருமுறை கலாநிதி அருட் குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள்,சிவாலய திருப்பணி வித்தகர் ஆன்மீக செம்மல் சிலமலை எஜமான் ஸ்ரீ பாண்டி முனீஸ்வரர் ஆகியோரின் அருளாசியோடு அருள்மிகு ஸ்ரீவில்வேஸ்வரர் அருளால் புதியதாக கட்டப்பட்டுள்ள ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர், ஸ்ரீ லட்சுமி நாராயணர், ஸ்ரீ சரஸ்வதி பிரம்ம தேவர் ஆகிய மும்மூர்த்திகளின் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. காசி, நாசரேத், சுருளி தீர்த்தம் ஆகிய புண்ணிய தலங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட நன்னீரை பக்தர்களுக்கு தெளித்தனர்.மேலும் இந்த திருக்கோவிலில் யாகசாலை பூஜை, கோபுர அபிஷேகம், கும்ப கலசம் புறப்பாடு, புண்யாகவாசனம், மிஸ்ராங்கணம் பாலிகை பூஜை, ரஷபந்தனம், நவக்கிரஹ ஹோமம், ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், விக்ரஹம் கண் திறப்பு ஆகிய பூஜையுடன் ஓதுவார் கோகுலக்கண்ணன் பட்டர் தலைமையில் ஓதினர். மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் பக்தர்களுக்கு ஆன்மீக சொற்பொழிவும் அருளாசியையும் வழங்கினார்.

ஸ்மார்த்த சிவகுரு ஸ்ரீஜி அரிகரபுத்ர சங்கரர் மற்றும் மதுரை அழகர் கோவில் அர்ச்சகர் ஸ்ரீ ரமணா பட்டாச்சாரியார் ஆகியோர் நிகழ்ச்சியை நடத்தினர். கும்பாபிஷேக நிகழ்ச்சியில் ஆன்மீக செம்மல் புலவர் இராசரத்தினம், ஈஸ்வரி எலக்ட்ரிக்கல்ஸ் உரிமையாளர் ராஜீவ் குமார், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் கலைவாணி மதிவாணன், அரசு ஒப்பந்ததாரர் பாலா, முருகமலை குரோரைட் நிறுவனத்தினர் மற்றும் முருகமலை நகர் ஊர் பொதுமக்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர். மும்மூர்த்தி அறக்கட்டளை திருப்பணி குழு தலைவர் கோவிந்தராஜ், செயலாளர் சரவணகுமார், பொருளாளர் சீனிவாசன் ஆகியோர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர். எ.ஆர்.எம் குடும்பத்தினரான பாண்டியரத்தினம் ராஜமாணிக்கம் மும்மூர்த்தி திருக்கோவில் அமைய இடம் கொடுத்து உதவினார் என்பது குறிப்பிடத்தக்கது. மஹா கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு விழா குழுவினர் சார்பில் அன்னதானம் வழங்கினர்.



நெல்லை மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன் மரியாதை நிமித்தமாக புதிய மாவட்ட ஆட்சித் தலைவராக பொறுப்பேற்ற ரா. சுகுமாரை நேரில் சந்தித்து புத்தகம் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.



தேனியில் ஏஐடியுசி டாஸ்மாக் தொழிற் சங்கங்களின் சார்பாக பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தேனியில் இருந்து செல்ல இருந்த டாஸ்மாக் பணியாளர்கள் சென்னைக்கு செல்ல விடாமல் தேனியில் இடைமறித்து போலீசாரால் கைது செய்யப்பட்டு வீரபாண்டியில் உள்ள மண்டபத்தில் அடைக்கப்பட்டுள்ளனர்.



நெல்லை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தேசிய குடற்புழு நீக்கல் நாள் நிகழ்ச்சி பள்ளி கலையரங்கத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ரா. சுகுமார் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். நெல்லை மாவட்டம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி கலையரங்கத்திற்குள் தேசிய குடல் புழு நீக்கல் நாள் நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் மாணவிகளுக்கு குடல் புழு நீக்கல் மருந்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் மாணவர்களுக்கு கொடுத்து நிகழ்ச்சியை துவக்கினார். நிகழ்ச்சியில் பள்ளி மாணவிகள் திரளாக கலந்து கொண்டு பங்கு பெற்றனர் மேலும் இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன், மாநகராட்சி மேயர் கோ ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜு, மாமன்ற உறுப்பினர்கள் பள்ளி தலைமை ஆசிரியை மற்றும் அரசு அலுவலர்கள், மேயர் உதவியாளர் சேக் பிள்ளை பலர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விருதுநகரில் நடைபெற்ற திருக்குறள் மாணவர் மாநாட்டில் திருக்குறள் பரதநாட்டிய போட்டியில் மாநில அளவில் முதலிடம் பெற்ற மார்த்தாண்டம் கிறிஸ்து ராஜா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியை சார்ந்த மாணவி திரேஸ் தென்றல் ஜெகத் மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனாவை, நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சியின் வலம்புரிவிளை குப்பைக்கிடங்கில் இதுவரையில் இது போன்ற திடீர் தீ விபத்து ஏற்பட்டதில்லை கடந்த நான்கு நாட்களாக தீயனைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு தீயை அணைத்த பின்பும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேலும் தீ விபத்து ஏற்படாத வண்ணம் தீயனைப்பு வீரர்களின் பணிகளை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் . பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார் உடன் மண்டலத்தலைவர் .ஜவஹர்,செயற்குழு .சதாசிவம் மற்றும் தீயனைப்புத்துறை அதிகாரிகள் மாநகராட்சி அதிகாரிகள் தி மு க நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 23வது வார்டுக்குட்பட்ட சாந்தன் செட்டி தெருவில் ஓடை வடிக்கால் சீரமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் . துவக்கி வைத்தார்.உடன் மண்டலத்தலைவர்.ஜவஹர், மாமன்ற உறுப்பினர் .விஜிலா ஜஸ்டஸ்,வட்ட செயலாளர்கள் .சுரேஷ் ராமகிருஷ்ணன் மற்றும் தி மு க நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## நத்தம் அருகே இச்சிமரசித்தி விநாயகர் கோவில் கும்பாபிஷேகம்



நத்தம், பிப், 12

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே லிங்கவாடி கிராமத்தில் இச்சிமரசித்தி விநாயகர் கோவில் கும்பாபிஷேக விழா நடந்தது. விழாவில் முதல் நாள் கணபதி ஹோமம், அஷ்டலட்சுமி, நவக்கிரக ஹோமம் மற்றும் முதல் காலயாகசாலை பூஜைகள் நடந்தது. இதைத் தொடர்ந்து மறுநாள் விக்னேஷ்வர பூஜை, வேதிகாபுணர் பூஜைகளும், இரண்டாம் மற்றும் மூன்றாம் கால யாகசாலை பூஜைகள் நடந்தது. தொடர்ந்து நேற்று காலை கோ பூஜை, புணர் பூஜைக்கு பின் யாகசாலையில் இருந்து மேளதாளம் முழங்க புனித தீர்த்த குடங்கள் கோபுர உச்சிக்கு எடுத்து செல்லப்பட்டது. அங்கு சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க குடம், குடமாக புனித தீர்த்தங்கள் கலசத்தில் ஊற்றப்பட்டது. தொடர்ந்து மூலவருக்கு சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.இந்த விழாவில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர். அவர்களுக்கு புனித தீர்த்தமும், பூஜை மலர்களும், அன்னதானமும் வழங்கபட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை லிங்கவாடி மேற்குத்தெரு பொதுமக்கள் செய்திருந்தனர்.

## தென்பழனி வழிவிடும் முருகன் கோவிலில் தைப்பூச திருவிழா அலைமோதிய பக்தர்கள்






சின்னமனூர் பிப், 12

தேனி மாவட்டம் சின்னமனூர் அருகில் மேகமலை மலைச்சாலை அடிவாரத்தில் அமைந்துள்ள தென்பழனி வழிபடு முருகன் கோவிலில் தைப்பூசத்தை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர்.

குச்சனூர் பேரூராட்சி தலைவர் ரவிச்சந்திரன் சாமி தரிசனம் செய்தார் ஏராளமான பக்தர்கள் வரிசையில் காத்திருந்து நேத்திக்கடன் செய்து முருகனை தரிசித்து வருகின்றனர். வழிவிடு முருகன் திருக்கோவில் பூசாரி மணி மற்றும் நிர்வாகிகள் சிறப்பு பூஜை செய்து வருகின்றனர். கோயிலில் அன்னதானமும் வழங்கப்பட்டு வருகிறது ஓடைப்பட்டி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்



திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.சுகுமார், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். மனுக்களை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும் படி உத்தரவிட்டார். மாற்றுத்திறனாளிகளை நேரில் சந்தித்து மனுக்களை பெற்றுக் கொண்டார். மேலும் தகுதி உள்ளவர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

## திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் நிலக்கோட்டையில் கண்டன பொதுக்கூட்டம்




வத்தலகுண்டு பிப்.12

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் தமிழகத்திற்கு நிதி ஒதுக்காமல் வஞ்சித்த ஒன்றிய அரசின் பட்ஜெட் கண்டித்து திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் நிலக்கோட்டையில் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு மா திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் பழனி எம்எல்ஏவுமான ஐபி செந்தில்குமார் தலைமை வைத்தார் அவைத்தலைவர் காமாட்சி துணை துணை செயலாளர்கள் நாகராஜன் பிலால் உசேன் மார்க்கெட் மேரி பொருளாளர் சத்தியமூர்த்தி ஒன்றிய செயலாளர் கரியால் பாண்டியன் செளந்தர பாண்டியன் கே.பி முருகன் கனிக்குமார் வழக்கறிஞர் மணிகண்டன் நகரச் செயலாளர்கள் அம்மைய நாயக்கனூர் விஜயகுமார் வத்தலகுண்டு சின்னத்துரை நிலக்கோட்டை கோவில் பிள்ளை வர்த்தக அணி மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் முருகேசன் ஆகியோர் முன்னிலை முன்னிலை வகித்தனர் வரவேற்புரை யாற்றினார் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பெரியசாமி கலந்துகொண்டு பேசியதாவது

தமிழ்நாட்டின் பெண்மணி என விளம்பரப் படுத்திக் கொள்ளும் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற வார்த்தையை கூட பயன்படுத்தவில்லை இது மிகவும் வேதனை அளிக்க கூடிய விஷயம் தமிழ்நாட்டில் வளர்ச்சி திட்ட பணிகளை முடக்கும் வகையில் மைனாரிட்டி பாரதிய ஜனதா அரசு ஆதரவான பீகார் மாநில த்திற்கும் ஆந்திர மாநிலத்திற்கும் மட்டுமே அதிக நிதி ஒதுக்கியத்துடன் ஓர வஞ்சகையுடனும் தமிழகத்தை புறக்கணித்துள்ளார் தமிழ் நாட்டின் மாநில வரி சுமையையும் தமிழ் மொழியை யும் சுயமரியாதையையும் தளபதி யாரின் திராவிட மாடல் அரசு ஒருநாளும் விட்டுக் கொடுக்காது ஒன்றிய பட்ஜெட்டில் வஞ்சிக்கப்பட்ட அனைத்து மாநில அரசுகளும் விரைவில் ஒன்றிணையவும் அதற்கான பணிகளை தமிழகம முதல்வர் செய்வார் அப்போது இந்தியாவில் கண்டிப்பாக ஆட்சி மாற்றம் ஏற்படும் தமிழகத்தில் உள்ளது ஏற்கனவே ஒரே காரணத்திற்காக மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கும் ஒன்றிய பட்ஜெட்டில் நிதி ஒதுக்கவில்லை அதானி அம்பானிக்காக 25 லட்சம் கோடி கடன் தள்ளுபடி செய்த ஒன்றிய அரசு ஏழை எளிய மாணவ மாணவியர்களின் கல்வி கடன்களை தள்ளுபடி செய்யவில்லை அரசின் அனைத்துதிட்டங்களும் இடைத் தரகர்கள் இன்றி கலைக்கோடி மக்களையும் சென்றடையவும் வகையில் நடைபெற்றது திராவிட மாடல் அரசு ஆண்டு 20,000 கோடி வரை ஜிஎஸ்டி செலுத்தும் தமிழகத்திற்கு ஒன்றிய அரசு 560 கோடி மட்டுமே ஒதுக்கி உள்ளது இதனை வன்மையாக கண்டிக்கிறோம் நாம் செலுத்தும் வரிப்பணத்தை வடமாநிலங்களுக்கு வாரி இறைக்கும் பாரதி ஜனதா அரசே ஒருபோதும் தமிழக மக்கள் அவர்களுக்கு வாக்க ளிக்க மாட்டார்கள் எனக் கூறினார்

கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் ஆம்பூர் தர்மன் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் மாநகர செயலாளர் ராஜப்பா துணைச் செயலாளர் இளமதி ஜோதி பிரகாஷ் ஒன்றிய செயலாளர்கள் ஆத்தூர் முருகேசன் வெள்ளிமலை நெடுஞ்செழியன் துணைச் செயலாளர் வெள்ளி மலை ராஜாங்கம் செல்வம் பாலச்சந்திரன் அழகேசன் ஆரோக்கியம் பொருளாளர்கள் அறிவு வேல்முருகன் மாவட்ட இளைஞரணி கணேசன் துணை அமைப்பாளர் முகைதீன் மாணவரணி பிரபாகரன் வத்தலகுண்டு துணை நகரச் செயலாளர் ஜாகிர் உசேன் வார்டு செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் என பல கலந்து கொண்டார்கள்



தேனி மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், சமூக நலத்துறை சார்பில் பெண் குழந்தையை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் காவலர்களுக்கு வெயிலின் தாக்கம் இல்லா வண்ணம் பணிபுரிய பெரிய குடைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, வழங்கினார்.



தேனி மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமுக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களையும் வழங்கினார்.



மதுரை வட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் மதுரை மாவட்டம் திருமலை நாயக்கர் மகாலில் உள்ள மாமன்னர் திருமலை நாயக்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச்சிலைக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாலையணிவித்து மரியாதை செய்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் , மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் , மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், நேரடியாக பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# கவுரவ விரிவுரையாளர்களுக்கு ஆதரவாக இந்திய மாணவர் சங்கம் ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை, பிப்.12

:கவுரவ விரிவுரையாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி இந்திய மாணவர் சங்கத்தினர் புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி முன்பாக ஆர்ப்பாட்ம் நடத்தினர்.

பணிநிரந்தரம் செய்ய வேண்டும். யுஜிசி பரிந்துரை செய்த குறைந்தபட்ட ஊதியம் ரூ.57,500தை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கவுரவ விரிவுரையாளரக்ள் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கவுரவ விரிவுரையாளர்களின் மேற்படி நியாயமான கோரிக்கைகளை நிரைறவேற்றக் கோரியும், மன்னர் கல்லூரியில் துணைக் கட்டுப்பாட்டாளரை உடனடியாக நியமிக்க வலியுறுத்தியும் இந்திய மாணவர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்திற்கு மாணவர் சங்கத்தின் மன்னர் கல்லூரி கிளைத் தலைவர் ராரணி பிரயா தலைமை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி சங்கத்தின் மாவட்டச் செயலாளர் இரா.வசந்தகுமார், துணைத் தலைவர் பாலாஜி, செயற்குழு உறுப்பினர் மகாலெட்சமி உள்ளிட்டோர் பேசினர்.

# சிவகங்கை கேந்திரிய வித்யாலயா பள்ளியில் இணைய பாதுகாப்பு நாள் விழா






சிவகங்கை, பிப்.12

சிவகங்கை மாவட்டம், இணைய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, கேந்திரிய வித்யாலயா பள்ளியில் இணைய பாதுகாப்பு நாள் விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில், மாணவர் களிடையே இணைய பாதுகாப்பு குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கையில்,

இன்றைய நவீன கால கட்டத்தில் இணையம் என்பது நாம் ஒவ்வொருவரின் வாழ்விலும் இன்றியமையதாதாக அமைந்துள்ளது. அவ்வாறாக உள்ள இணையத்தில் பல்வேறு நன்மையும் உள்ளது, அதேபோன்று தீமையும் உள்ளது. ஒவ்வொருவரும் தங்களுக்கு பயனுள்ள வகையிலான இணையத்தை தேர்ந்தெடுத்து, அதன் மூலம் பயன்பெற்று வருகின்றனர். இணையதளத்தின் வாயிலாக, நாம் பொது அறிவை வளர்த்துக்கொள்ளலாம். நாம் அறிந்து கொள்ள வேண்டியவைகளை மற்றவர்களை நாடாமல் உடனுக்குடன் நம்முடைய கைப்பேசி வாயிலாகவே அறிந்து கொள்ளலாம்.

மேலும், வருங்கால தலைமுறையினரான மாணாக்கர்கள் வலைதளத்தின் வாயிலாக கிடைக்கப்பெறும் எண்ணற்ற ஏனைய பயன்பாடுகளை முறையாக பயன்படுத்திக்கொள்வதும், அதனை தவறாக பயன்படுத்தினால் அதனால் ஏற்படும் தீமைகள் குறித்தும் அறிந்து கொள்வது அவசியமாகும். குறிப்பாக, தற்போது இணையதளத்தின் வாயிலாக எண்ணற்ற தகவல்கள், தொலைவில் உள்ள நபர்களை அணுகுதல், பண பரிவர்த்தனை மேற்கொள்ளுதல் என பல்வேறு செயல்பாடுகளுக்கு இணையதளம் அடிப்படையாகவும் அமைகிறது.

தற்போது வளர்த்து வரும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம், ஒருங்கிணைந்த கட்டண இடைமுக பரிவர்த்தனைகள் குறித்தும், அதன் பயன்பாடுகள் மற்றும் பாதுகாப்பாக பயன்படுத்துவது குறித்தும், இரண்டு காரணி அங்கீகாரம் குறித்தும் மாணாக்கர்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக, வலைதளத்தினை தவறாக பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் சைபர் குற்றம் குறித்தும் விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும். அவ்வாறாக, ஏற்படும் சைபர் குற்றம் குறித்து, 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாக தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். மேலும், மாணாக்கர்கள் இன்றையதினம் நடைபெறும் இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் வாயிலாக திறன் மிக்க வல்லுநர்களை கொண்டு எடுத்துரைக்கப்படும் Digital arrest, Data theft போன்ற கருத்துகளை முறையாக உள்வாங்கி தங்களைச் சார்ந்தோர்களிடம், வலைதள பயன்பாட்டின் முக்கியம் மற்றும் அவசியம் குறித்து எடுத்துரைக்க வேண்டும்.

மேலும், தமிழகத்தில் மாணாக்கர்கள் சிறந்து, திறன் மிக்கவர்களாக விளங்கிட வேண்டும் என்ற அடிப்படையில், கல்வி மற்றும் அவர்களின் தனித்திறன்களுக்கு முக்கியத்துவம் அளித்திடும் வகையில், அரசால் பல்வேறு நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கேற்றார்போல் வலைதளத்தினை தங்களது தேவைகளுக்கு மட்டும் சரியான முறையில் பயன்படுத்தி கொண்டு, சிறந்து விளங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்வின் போது இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து, நடைபெற்ற வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணாக்கர்களை ஊக்குவிக்கும் வகையில், மாவட்ட ஆட்சித்தலைவர் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய டிசர்ட்களை மாணாக்கர்களுக்கு பரிசாக வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட தகவலியல் அலுவலர் (தேசிய தகவல் மையம் ராஜகுரு மற்றும் சிவகங்கை கேந்திரிய வித்யாலயா பள்ளி முதல்வர் மனோஜ் குமார் சர்மா, பள்ளி ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வலம்புரிவிளை குப்பைக்கிடங்கில் ஏற்பட்ட திடீர் தீயினை அணைக்கும் பணியில் ஈடுபட்ட வீரர்களை கௌரவித்த ஆட்சியர்



கன்னியாகுமரி, பிப்.12

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வலம்புரிவிளை உரங்கிடங்கில் ஏற்பட்ட திடீர் தீயினை அணைக்கும் பணியில் ஈடுபட்;ட வீரர்களை நேற்று (11.02.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, , நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, முன்னிலையில் பொன்னாடை போர்த்தி தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள், வணிக நிறுவங்கள், உணவகங்கள் உள்ளிட்டவைகளில் ஒவ்வொரு நாளும் டன் கணக்கில் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் குப்பைகள் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வலம்புரிவிளை பகுதியில் உள்ள குப்பை கிடங்கில் கொட்டப்படுகிறது. இந்த குப்பை கிடங்கில் கடந்த 07.02.2025 அன்று திடீரென தீ ஏற்பட்டது. மேலும் தீ பரவாமல் இருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் மற்றம் மாவட்ட தீயணைப்பு அலுவலருடன் ஆலோசனை நடத்தப்பட்டது. வலம்புரிவிளை உரக்கிடங்கில் ஏற்பட்ட திடீர் தீயினை போர்கால அடிப்படையில் அணைக்கும் பணியினை மாநகராட்சி நிர்வாகம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினேன்.

மேலும் தீயினால் அந்தபகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்து, பொதுமக்கள், அருகாமையில் உள்ள பள்ளிகள், வாகன ஓட்டிகள் உள்ளிட்டவர்களுக்கு நோய் தொற்று பரவும் சூழலை தடுக்கும் வகையில் கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகம் இணைந்து துரிதமாலீக நடவடிக்கை மேற்கொண்டதன் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட தீயணைப்பு அலுவலர் மற்றும் திருநெல்வேலி மாவட்ட தீயணைப்பு அலுவலர்கள் தலைமையில் 14 நிலை அலுவலர்கள், 145 இதர பணியாளர்கள் மற்றும் 50க்கும் மேற்பட்ட மாநகராட்சி பணியாளர்கள் இணைந்து தீயணைக்கும் பணியில் முழு வீச்சில் ஈடுபட்டனர்.

மேலும் திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் இருந்து தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு தீயணைக்கும் பணி மிகவும் தீவிரமாக நடைபெற்றது. கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து நாகர்கோவில், தக்கலை, திங்கள் சந்தை, கன்னியாகுமரியிலிருந்து என 4 தீயணைப்பு வாகனங்கள், திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து பாளையங்கோட்டை, வள்ளியூர் என 2 தீயணைப்பு வாகனங்கள், தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து தூத்துக்குடி சிப்காட் மற்றும் கழுகுமலையிலிருந்து 2 வாகனங்கள், தென்காசி மாவட்டத்திலிருந்து கடையநல்லூர், சேரன்மகாதேவி, ஆலங்குளத்திலிருந்து 3 தீயணைப்பு வானங்கள் என மொத்தம் 11 தீயணைப்பு வாகனங்கள், ஆறு கிட்டாச்சிகள் பத்துக்கு மேற்பட்ட டேங்கர் லாரிகள் தீயணைக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு உள்ளன.

தொடர்ந்து நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் குப்பை கிடங்கில் முகாமிட்டு தீயணைக்கும் பணியை கண்காணித்து வந்தார்கள் தீயணைக்கும் பணியில் உள்ள வீரர்களுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்பட்டன. அதன் விளைவாக இன்று தீ அணைக்கப்பட்டுவிட்டது. தீயணைக்கும் பணியில் ஈடுப்பட்ட அனைத்து பணியாளர்களையும் மனதார பாராட்டுகிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கன்னியாகுமரி மாவட்ட தீயணைப்பு அலுவலர் சத்திய குமார் தலைமையில் தீயினை அணைத்த அனைத்து வீரர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட தீயணைப்பு அலுவலர்கள் சத்திய குமார் (கன்னியாகுமரி), வினோத் (திருநெல்வேலி), உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் இம்மானுவேல், தீயணைப்பு பணியாளர்கள், மாநகராட்சி பணியாளர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161